

கழகத் தலைவரும், தமிழ்நாடு முதலமைச்சருமான மு.க. ஸ்டாலின் அவர்கள் நேற்று (15.7.2025) மயிலாடுதுறை மாவட்ட கழக தலைமை அலுவலகத்தில் புதுப்பிக்கப்பட்ட அண்ணா பகுத்தறிவு மன்றத்தில் நிறுவப்பட்டுள்ள முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களின் வெண்கல திருவுருவச் சிலையை திறந்து வைத்தார். இந்நிகழ்வில், அமைச்சர்கள் கே.என். நேரு, எம்.ஆர்.கே.பன்னீர்செல்வம், சிவ.வீ. மெய்யநாதன், தமிழ்நாடு அரசின் தில்லி சிறப்பு பிரதிநிதி ஏ.கே.எஸ். விஜயன், மாவட்ட கழகச் செயலாளர், நிவேதா எம். முருகன் எம்.எல்.ஏ.,, மு. பன்னீர்செல்வம் எம்.எல்.ஏ. , நகர கழக செயலாளர் குண்டாமணி (எ) என். செல்வராஜ், தலைமை பொதுக்குழு உறுப்பினர் எஸ்.சங்கர நாராயணன், மாவட்ட அரசு வழக்கறிஞர் டாக்டர் இராம.சேயோன், மாவட்ட விவசாய அணி தலைவர் டாக்டர் எஸ். நாகராஜன் மற்றும் கழக நிர்வாகிகள் கலந்து கொண்டனர்.



தமிழ்நாடு முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் நேற்று (15.7.2025) மயிலாடுதுறை, கொள்ளிடம் புறவழிச்சாலையில் புதிதாக நிறுவப்பட்டுள்ள முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களின் திருவுருவச் சிலையை திறந்து வைத்து, கழக கொடியை ஏற்றி வைத்தார். இந்நிகழ்வின்போது, நகராட்சி நிர்வாகத் துறை அமைச்சர் கே.என்.நேரு, வேளாண்மை உழவர் நலத்துறை அமைச்சர் எம்.ஆர்.கே. பன்னீர்செல்வம், பிற்படுத்தப்பட்டோர் நலத்துறை அமைச்சர் சிவ.வீ. மெய்யநாதன், தொழிலாளர் நலன் மற்றும் திறன் மேம்பாட்டு துறை அமைச்சர் சி.வி. கணேசன், தமிழ்நாடு அரசின் தில்லி சிறப்பு பிரதிநிதி ஏ.கே.எஸ். விஜயன், மயிலாடுதுறை மாவட்டச் செயலாளரும், சட்டமன்ற உறுப்பினருமான நிவேதா எம். முருகன், சட்டமன்ற உறுப்பினர் பன்னீர்செல்வம், தமிழ்நாடு மீன்வளர்ச்சி கழகத்தின் தலைவர் ந. கௌதமன், சட்டமன்ற முன்னாள் உறுப்பினர் குத்தாலம் பி. கல்யாணம், கொள்ளிடம் மேற்கு ஒன்றிய கழகச் செயலாளர் செல்லசேது. ரவிகுமார் ஆகியோர் உடனிருந்தனர்.



கழகத் தலைவரும், தமிழ்நாடு முதலமைச்சருமான மு.க. ஸ்டாலின் அவர்கள் நேற்று (15.7.2025) மயிலாடுதுறை மாவட்டம், செம்பிருப்பு கடைவீதி பகுதியில் கழகத்தின் சார்பில் நிறுவப்பட்டுள்ள முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களின் திருவுருவச் சிலையை திறந்து வைத்தார். இந்நிகழ்வில், அமைச்சர்கள் கே.என். நேரு, எம்.ஆர்.கே.பன்னீர்செல்வம், சிவ.வீ. மெய்யநாதன், தமிழ்நாடு அரசின் தில்லி சிறப்பு பிரதிநிதி ஏ.கே.எஸ். விஜயன், மாவட்ட கழகச் செயலாளர், நிவேதா எம். முருகன் எம்.எல்.ஏ. , சட்டமன்ற உறுப்பினர் மு. பன்னீர்செல்வம், கிழக்கு சீர்காழி ஒன்றிய செயலாளர் பஞ்சுகுமார், தலைமை செயற்குழு உறுப்பினர்கள் முத்து மகேந்திரன், ஜி.என். ரவி, முன்னாள் ஊராட்சி மன்ற தலைவர் முத்து தேவேந்திரன் மற்றும் கழக நிர்வாகிகள் கலந்து கொண்டனர்.

செங்கல்பட்டு மாவட்டம், பல்லாவரம், மறைமலை அடிகளார் தெரு பகுதியில் மறைமலை அடிகளார் அவர்களின் 148வது பிறந்த நாளை முன்னிட்டு அவர்களது இல்லத்தில் உள்ள மறைமலை அடிகளார் அவர்களின் திருவுருவ சிலைக்கு கழகப் பொருளாளரும், கழக மக்களவைக் குழுத் தலைவருமான டி.ஆர்.பாலு, குறு, சிறு மற்றும் நடுத்தரத் தொழில் நிறுவனங்கள் துறை அமைச்சர் தா.மோ.அன்பரசன் ஆகியோர் மலர்தூவி மரியாதை செலுத்தினார்கள். அருகில் செங்கல்பட்டு மாவட்ட ஆட்சித் தலைவர் தி.சினேகா, பல்லாவரம் சட்டமன்ற உறுப்பினர் இ.கருணாநிதி, மாநகராட்சி மேயர் வசந்தகுமாரி, துணை மேயர் காமராஜ், பகுதிச் செயலாளர்கள் வே.கருணாநிதி, இ.ஜோசப் அண்ணாதுரை, இ.எஸ். பெர்னாட் மற்றும் பகுதி கழக நிர்வாகிகள் உள்ளனர்.





### முதல்வர் மு.க.ஸ்டாலின் - கடலூர் மாவட்டம் - சிதம்பரம் நகராட்சியில் தொடங்கி வைத்ததைத் தொடர்ந்து

# பெருநகர சென்னை மாநகராட்சியில் - 7 வார்டுகளில் 'உங்களுடன் ஸ்டாலின்' திட்ட முகாம்கள்!

## துணை முதல்வர் உதயநிதி ஸ்டாலின் – தேனாம்பேட்டை மண்டலம் – 114வது வார்டில் நடைபெற்ற முகாமினைப் பார்வையிட்டு – மக்களுடன் கலந்துரையாடினார்!

**சென்னை, ஜூலை 16-**

**முதலமைச்சர் அவர்களால், கடலூர் மாவட்டம் சிதம்பரம் நகராட்சியில் "உங்களுடன் ஸ்டாலின்" திட்ட முகாம் நேற்று (15.7.2025) தொடங்கி வைக்கப்பட்டதைத் தொடர்ந்து, பெருநகர சென்னை மாநகராட்சியில் 7 வார்டுகளில் "உங்களுடன் ஸ்டாலின்" திட்ட முகாம் தொடங்கி நடைபெற்றது.**

**துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள், தேனாம்பேட்டை மண்டலம், 114ஆவது வார்டில் நடைபெற்ற "உங்களுடன் ஸ்டாலின்" முகாமினைப் பார்வையிட்டு மக்களிடம் கலந்துரையாடினார்.**

அதன் விவரம் வருமாறு:–

முதலமைச்சர் அவர்கள், மக்கள் குறைகளை வீட்டிற்கே வந்து கேட்டறிந்து தீர்வு காணும் "உங்களுடன் ஸ்டாலின்" திட்ட முகாமினை, கடலூர் மாவட்டம் சிதம்பரம் நகராட்சியில் நேற்று (15.07. 2025) தொடங்கி வைத்தார்.

இதனைத் தொடர்ந்து, பெருநகர சென்னை மாநகராட்சியில் நேற்று (15.07.2025) 7 வார்டுகளில் "உங்களுடன் ஸ்டாலின்" திட்ட முகாம் தொடங்கி நடைபெற்றது.

துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள், தேனாம்பேட்டை மண்டலம், 114ஆவது வார்டு, ஸ்ரீ மகாவீர் ஜெயின் திருமண மண்டபத்தில் நடைபெற்ற "உங்களுடன் ஸ்டாலின்" முகாமினைப் பார்வையிட்டு மக்களிடம் கலந்துரையாடி, பொதுமக்கள் வழங்கிய மனுக்கள் மீது உடனடி நடவடிக்கை மேற்கொள்ள அலுவலர்களுக்கு அறிவுறுத்தினார். மேலும் மக்கள் வழங்கிய மனுக்களுக்குத் தீர்வுகளை வழங்கினார்.

அடையாறு மண்டலம், வார்டு-168, சைதாப்பேட்டை, அன்னை வேளாங்கண்ணி கல்லூரியில் நடைபெற்ற முகாமினை மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் மா.சுப்பிரமணியன் அவர்கள் பார்வையிட்டு, மக்கள் வழங்கிய மனுக்களுக்கு தீர்வுகளை வழங்கினார்.

வி.க.நகர் மண்டலம், வார்டு-76, ஸ்டாரஹன்ஸ் சாலையில் உள்ள வி.க.நகர் மண்டல அலுவலகத்தில் நடைபெற்ற முகாமினை மாண்புமிகு இந்து சமயம் மற்றும் அறநிலையத்துறை அமைச்சரும், சென்னைப் பெருநகர் வளர்ச்சிக் குழுமத் தலைவருமான பி.கே.சேகர்பாபு அவர்கள் பார்வையிட்டு, மக்கள் வழங்கிய மனுக்களுக்குத் தீர்வுகளை வழங்கினார்.

மேலும், மாதவரம் மண்டலம், வார்டு-25ல், மாதவரம் தபால் நிலைய சாலையில் உள்ள எம்.ஆர்.பேலஸிலும், தண்டையார்பேட்டை மண்டலம், வார்டு-38ல் பட்டேல் நகர் பள்ளியிலும், வளசரவாக்கம் மண்டலத்தில், வார்டு-143ல், அம்பத்தூர் இன்டஸ்ரியல் எஸ்டேட், வேலம்மாள் அரங்கிலும், தேனாம்பேட்டை மண்டலம், வார்டு-109ல், மத்திய பள்ளி சாலையில் உள்ள கில்நகர் விளையாட்டுத் திடலிலும் 'உங்களுடன் ஸ்டாலின்' திட்ட முகாம் நடைபெற்றது.

மேலும், கலைஞர் மகளிர் உரிமைத் தொகை பெறத் தகுதியுள்ள விடுபட்ட மகளிர் இந்த முகாமில் கலைஞர் மகளிர் உரிமைத் திட்டத்திற்கான விண்ணப்பத்தி னை பெற்று பூர்த்தி செய்து வழங்கினர். முகாமிற்கு வருகை தந்த பொதுமக்களின் உடல்நலனைப் பேணும் வகையில், சிறப்பு மருத்துவ முகாம்களும் நடத்தப்பட்டது.

பெருநகர சென்னை மாநகராட்சியில் முதற்கட்டமாக 15.07.2025 முதல் 14.08. 2025 வரை "உங்களுடன் ஸ்டாலின்" திட்டத்தின் கீழ் 109 முகாம்கள் நடைபெறுகிறது. இந்த முகாம்கள் காலை 9 மணி முதல் மாலை 3 மணி வரை நடைபெறும்.

இந்நிகழ்ச்சிகளில், மேயர் திருமதி ஆர்.பிரியா, நாடாளுமன்ற உறுப்பினர் தயாநிதி மாறன், கலாநிதி வீராசாமி, சட்டமன்ற உறுப்பி னர்கள் தாயகம் கவி, த.வேலு, எஸ். சுதர்சனம், ஜோசப் சாமுவேல், ஜெ.ஜெ.எபினேசர், ஆர்.டி. சேகர், கா.கணபதி, டாக்டர் நா.எழிலன், துணை மேயர் மு.மகேஷ்குமார், ஆணையாளர் ஜெ.குமரகுருபரன், நிலைக்குழுத் தலைவர் (பணிகள்) நே.சிற்றரசு, மண்டலக் குழுத் தலைவர்கள் எஸ். மதன்மோகன், ஆர்.துரைராஜ், திருமதி சரிதா மகேஷ்குமார், எஸ்.நந்தகோபால், நேதாஜி யு.கணேசன், நொளம்பூர் வே.ராஜன், சென்னை பெருநகர் குடிநீர் வழங்கல் மற்றும் கழிவுநீரகற்று வாரிய மேலாண்மை இயக்குநர் டாக்டர் டி.ஜி.வினய், இணை ஆணையர் முனைவர் வீ.ப. ஜெயசீலன், துணை ஆணையாளர்கள் பிரதி விராஜ், , கட்டா ரவி தேஜா, , அஃதாப் ரசூல், (தெற்கு வட்டாரம்), எச். ஆர்.கௌஷிக், (மத்திய வட்டாரம்), மாமன்ற உறுப்பினர்கள், அரசு அலுவலர்கள் மற்றும் பொதுமக்கள் கலந்து கொண்டனர்.





கழகத் தலைவர் அவர்களின் ஆணையேற்று ஓரணியில் தமிழ்நாடு உறுப்பினர் சேர்க்கை வார்டு 128க்குட்பட்ட கிரகலட்சுமி அடுக்குமாடி குடியிருப்பில் வசிப்போரிடம் கழக அரசின் சாதனைகளை, திட்டங்களை எடுத்துரைத்து உறுப்பினர் சேர்க்கையில் ஈடுபட்டனர். இந்நிகழ்வில் வட்ட கழக செயலாளர் ராஜா, மாநகராட்சி மாமன்ற உறுப்பினரும், மாநில மகளிர் அணி சமூக வலைதளப் பொறுப்பாளருமான ரத்னா லோகேஷ்வரன், தொகுதி பொறுப்பாளர் உமாகாந்த், கலைஞர் நகர் வடக்கு பகுதி பொருளாளர் துரை ரஞ்சித்குமார் உள்ளிட்டோர் இருந்தனர்.

### பெருந்தலைவர் காமராஜர் கண்ட கல்விக் கனவுகளை

# 'புதுமைப் பெண்' - 'தமிழ்ப் புதல்வன்' - 'நான் முதல்வன்' - போன்ற திட்டங்கள் வழியே 'திராவிட மாடல்' அரசு நனவாக்கி வருகிறது!

## வலைதளப்பதிவில் – துணை முதல்வர் உதயநிதி ஸ்டாலின் பெருமிதம்!

**சென்னை, ஜூலை 16**

**பெருந்தலைவர் காமராஜர் அவர்களின் பிறந்தநாளை முன்னிட்டு, நேற்று விடுத்த வலைதளப்பதிவில், துணை முதல்வர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள், "காமராஜர் கண்ட கல்விக் கனவுகளை, 'புதுமைப் பெண்' - 'தமிழ்ப் புதல்வன்' - 'நான் முதல்வன்' - போன்ற திட்டங்களின் வழியே 'திராவிட மாடல்' அரசு நனவாக்கி வருகிறது" என்று பெருமிதத்துடன் குறிப்பிட்டார்.**

துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள் வெளியிட்டுள்ள சமூக வலைதளப்பதிவு வருமாறு:-

கல்வி எனும் ஒளி, சமூகத்தில் மண்டிக்கிடந்த இருளை எப்படியெல்லாம் கிழித்தெறியும் என்பதை சாத்தியப் படுத்திக் காட்டிய கர்ம வீரர் காமராஜரின் பிறந்த நாள் இன்று!

எட்டாக்கனியாக இருந்த கல்வி, ஏழை எளிய பிள்ளைகள் எல்லோருக்கும் சென்று சேர பள்ளிகளைத் திறந்து, மதிய உணவிட்ட காமராஜரின் பிறந்த நாளை, "கல்வி வளர்ச்சி நாள்" என்று அறிவித்தார் முத்தமிழறிஞர் கலைஞர் அவர்கள்!

காமராஜர் வாழ்ந்த தியாகராயர் நகர் இல்லத்தைப் புதுப்பிப்பதோடு, அவர் பெயரில் நூலகம் மற்றும் அறிவுசார் மையத்தை திருச்சியில் அமைக்கிறார், நம் முதலமைச்சர் மு.க. ஸ்டாலின் அவர்கள்!

காமராஜர் கண்ட கல்விக்கனவுகளை, புதுமைப்பெண், தமிழ்ப்புதல்வன், நான் முதல்வன் போன்ற திட்டங்களின் வழியே நனவாக்கி வருகிறது நம் திராவிடமாடல் அரசு!

பெருந்தலைவர் காமராஜர் ஆற்றிய பணிகள் தமிழ் மண்ணில் என்றும் நிலைத்திருக்கும் வழிகாட்டும்.

அவர் புகழ் ஓங்கட்டும்!

இவ்வாறு அப்பதிவில், துணை முதல்வர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள் குறிப்பிட்டுள்ளார்.





பல்லாவரம் சட்டமன்ற தொகுதி தாம்பரம் மாநகராட்சி மண்டலம் 2, 19 வது வார்டில் மாவட்ட கழகத் துணைச் செயலாளர் இ. கருணாநிதி எம்.எல். ஏ. புதுப்பிக்கப்பட்ட சிறுவர் பூங்காவை பொதுமக்கள் பயன்பாட்டிற்கு துவக்கி வைத்தார். அப்பொழுது மண்டல தலைவர் பகுதி கழகச் செயலாளர் இ. ஜோசப் அண்ணாதுரை பகுதி செயலாளர் இ. எஸ். பெர்னார்ட், மாமன்ற உறுப்பினர் பிருந்தா தேவி, சிலம்பரசன் உதவி செயற்பொறியாளர் உதவி பொறியாளர் வட்ட கழகச் செயலாளர் வி. என். சிலம்பரசன் கழக நிர்வாகிகள் நல்வாழ்வு சங்க நிர்வாகிகள் ஆகியோர் உடன் இருந்தனர்